விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 161 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 15 திங்கட்கிழமை (29.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## க.பொ.த (சா/த) பரீட்சை இன்று முதல் ஆரம்பம்


(கொழும்பு)

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட் 11

## வடக்கு மக்களின் நலனுக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது

### வடக்கு ஆளுநருடன் இந்திய உயர்ஸ்தானிகர்




(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும் அம் மக்களின் நலனுக்காகவும் இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்பாக்லே வட மாகாண ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்பாக்லே, வட 11

வாழ்த்துகின்றோம்



இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற வாழ்த்துகின்றோம்.
கல்விப் பிரிவு
வலம்புரி

# மத சுதந்திரத்தைப் பேண புதிய சட்டம் அமுலாக்கப்படும்

## புத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

(கொழும்பு)

**எதிர்வரும் காலங்களில் மத சுதந்திரம் மற்றும் கருத்துக்களை திரிபுபடுத்தல் தொடர்பில் புதிய சட்டமூலமொன்றை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மதங்களை புண்படுத்தும் வகையில் கருத்து வெளியிடுபவர்கள் தொடர்பில் பொலிஸார் இணைந்து விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் 11



## மத முரண்பாடுகளினால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### வஜிர அபேவர்த்தன எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை 11

### மகனுக்கு இன்று க.பொ.த (சா/த) பரீட்சை

## தந்தை விபத்தில் நேற்று உயிரிழப்பு

(கிளிநொச்சி)

மகன் இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த (சா/த) தரப் பரீட்சையில் தோற்றவுள்ள நிலையில் தந்தை நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி உமையாள் புரத்தில் நேற்று மாலை இடம்பெற்ற 11

### பருத்தித்துறையில்

## இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடொன்றுக்கு அருகில் இருந்து, நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த தியாகராஜா 11

## இந்தியாவின் புதிய பாராளுமன்றம் திறப்பு

### செங்கோலை நிறுவினார் மோடி



05

## எரிபொருள் ஒதுக்கீடு நாளை முதல் அதிகரிப்பு

### மோ.சைக்கிளுக்கு 14 லீற்றர்
### ஆட்டோக்களுக்கு 22 லீற்றர்

(கொழும்பு)

நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, பதிவு செய்யப்பட்ட ரக்சி முச்சக்கர வண்டிகளுக்கான 22 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். சிறைக் கைதியின் உண்ணாவிரதம் நிறைவு

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் கூரைக்கு மேலேறி சிறைக் கைதி ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் சமரச பேச்சுக்களை அடுத்து கூரையில் இருந்து இறங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து வேறு சிறைச்சாலைக்கு தன்னை மாற்றுமாறு கோரியே குறித்த கைதி போராட்டத்தில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாண சிறைச்சாலை கூரை மேலேறி நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலை அதிகாரிகளினால் கீழே இறக்கப்பட்டுள்ளார்.

மாத்தறையைச் சேர்ந்த புஷ்பகுமார (வயது 41) என்பவரே உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார்.

குற்றசெயல்களில் ஈடுபட்ட குற்றத்தில் கைதாகி குருவிட்ட சிறைச்சாலையில்சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில், யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தனக்கு யாழ்ப்பாண சிறைச்சாலையில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் தன்னை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டார். (ம-7,33)

கல்யாண மாலை சர்வதேச இலவச திருமண சேவை

# கல்யாண மாலை
## (சர்வதேச இலவச திருமண சேவை)

## அறிவித்தல்

**அன்பார்ந்த பொது மக்களுக்கு!**

யாழ்ப்பாணம் இலக்கம் 144, பிறவுண் வீதியிலுள்ள கல்யாண மாலை என்பது சமூக சேவை நோக்குடன் இயங்கும் சர்வதேச இலவச திருமண சேவை அமைப்பாகும்.

இங்கு நிலைய நிர்வாகச் செலவுகளின் பொருட்டு பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நிலைய நிர்வாகச் செலவு, காகிதாதிகள், தொலைபேசி மற்றும் மின் கட்டணங்கள் அதிகரித்து இருப்பதன் காரணமாக எதிர்வரும் 01.06.2023 இலிருந்து பதிவுக் கட்டணம் நான்காயிரம் ரூபாவாக (4,000/=) அறிவிடப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**நிர்வாகம்**
**கல்யாண மாலை**



## வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்
## ஆலய வருடாந்த பொங்கல் விழா

**02.06.2023 வெள்ளிக்கிழமை**

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

*அம்பிகை அடியார்களே!*

வன்னி விளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் சோபகிருது வருஷம் வைகாசித் திங்கள் 19ம் நாள் (02.06.2023) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விஷேட அபஷேகமும் அலங்கார பூஜைகளும் நடைபெறும். இரவு 09.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமை போல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:-**

1. பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 31.05.2023 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப் படுவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப்பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

ஸ்ரீ முத்துமாரி அம்மன் [illegible] சபை,
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.

(C-6638)

# பாக்கு நீரிணையை கடந்து தமிழ் இளைஞன் சாதனை



(மட்டக்களப்பு)

பாக்குநீரிணையை நீந்தி கடந்து தமிழ் இளைஞன் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவனும், ஜனாதிபதி சாரணர் விருது பெற்றவருமான தேவேந்திரன் மதுஷிகன் (வயது20) என்ற மாணவன் சாதனை படைத்துள்ளார்.

(28.05.2023) அதிகாலை 1 மணியளவில் தனுஷ்கோடியிலிருந்து தலை மன்னாரை நோக்கி தனது நீச்சல் பயணத்தை ஆரம்பித்த தேவேந்திரன் மதுஷிகன் பிற்பகல் 03.05 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே உள்ள சுமார் 32 கிலோ மீற்றர் தூரமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இதன் போது அருட்தந்தையர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமேல், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா, மன்னார் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர் ஸ்ரான்லி டிமேல் லெம்பேட், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞ.அன்ரனி டேவிட்சன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்த, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லூஸ்ரின் மோகன்ராஜ்.ஏ.கே.ஆர். நிறுவன பணிப்பாளர் றொஜன் உட்பட பலரும் கலந்துகொண்டு வரவேற்றனர். (ம-7)

# மகனின் மறைவை தாங்க முடியாத தந்தை மரணம்
## எழுதுமட்டுவாழில் சம்பவம்

மகனின் மறைவை தாங்க முடியாத வயோதிபத் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார். எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 45 வயதான இராஜதுரை ஜெயேந்திரன் என்பவர் விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்நிலையில் அவரின் இறுதிக்கிரியை அவரது வீட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை(28) முற்பகல் இடம் பெற ஏற்பாடாகி இருந்தது.

இந்நிலையில் அவரது தந்தையான ஆறுமுகம் இராஜதுரை (வயது- 88) என்பவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இருவரினதும் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை(28) பிற்பகல் எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் இடம்பெற்று அவர்களது குடும்பம் மயானத்தில் ஒரே கட்டையில் இருவரது உடலங்களும் சங்கமமாகின. (ம-7,60)

# ஆஸியிலிருந்து இலங்கை வந்த யாழைச் சேர்ந்தவர் விமானத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்த விமானத்தில் பயணித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த பயணி ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன் தினம் இரவு 10.35க்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான யூஎல் 605 என்ற விமானத்தில் வருகைதந்த 75 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த விமானம் தமது பயணத்தை ஆரம்பித்து சிறிது நேரத்தின் பின்னர் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்பதுடன், அவரது சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல் தெரிவிக்கின்றன. (ம-7)

# எம்.பி பதவியை அலிசப்ரி ரஹீம் இராஜினாமா செய்ய வேண்டும்
## சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிற்கு சட்டவிரோதமாக தங்கத்தை கொண்டுவந்த பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்தார். இதன்போது சரத் வீரசேகர மேலும் தெரிவிக்கையில்,

அலி சப்ரி ரஹீம் வெறுமனே 75 லட்சம் ரூபாவை மாத்திரம் செலுத்தி விடுதலையாகியுள்ளார். உண்மையில் இது சுயமரியாதை மற்றும் பாராளுமன்றத்தின் கௌரவம் தொடர்பான பிரச்சினை.

இவர் தவறிழைத்துள்ளார், சட்டத்தின்படி குற்றவாளியாகியுள்ளார். சரியாக இருந்தால் இவர் பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாத்து, பதவியை இராஜினாமா செய்யவேண்டும்.

அவ்வாறு நடந்தால் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது ஒரு பாடமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் என்பது மரபுரிமை சம்பந்தப்பட்டது

## அதற்கும் இன அடையாளங்களுக்கும் தொடர்பில்லை

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு

**(கொழும்பு)**

**வடக்கு -கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள். ஆகவே அந்த வரலாறுகளை பாதுகாப்பது எமது கடமை என புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

அத்துடன் வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருள் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத நிர்மாணங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் தொல்பொருளியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்படும் பகுதிகளில் பௌத்த அடையாளங்கள் நிறுவப்படுதல் மற்றும் தனியார் காணிகளில் பௌத்த விகாரைகள் நிறுவப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் போர் நிலைமைகள் நீடித்தமையால் தொல்பொருள் பகுதிகள் முழுமையாக அடையாளம் காணப்படவில்லை.

தொல்பொருள் என்பது நாட்டின் மரபுரிமைகள் சார்ந்த விடயமாகும். அதற்கும் இன அடையாளங்களுக்கும் தொடர்பில்லை.

இந்நிலையில் நாம், வடக்கு, கிழக்கில் காணப்படுகின்ற தொல்பொருளியல் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட அனைத்து அடையாளங்களும் சட்டத்திற்கு முரணானவையாகும்.

ஆகவே அவை தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றைக் கோரியுள்ளேன் அந்த அறிக்கை கிடைத்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

குருந்தூர்மலை, வெடுக்குநாறி தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அந்த வழக்குகளின் தீர்ப்புக்கள் வந்தபின்னரே இறுதியான தீர்மானத்தினை எடுக்க முடியும்.

கிளிநொச்சி உருத்திரபுரம் கந்தசுவாமி கோவில், திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருளியல் அடையாளங்கள் காணப்படுவதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அந்த விடயங்கள் சம்பநதமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சில இடங்களில் தொல்பொருளியல் பகுதிகளில் கோவில்கள் உள்ளிட்ட நிர்மாணங்கள் செய்யப்பட்டுள்ளன.

அவை தொடர்பிலும் கரிசனை கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன், வடக்கு- கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

அவர்களின் அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆகவே அந்த வரலாற்று தகவல்களையும் பாதுகாக்க வேண்டியது கடமையாகின்றது. அதுபற்றி யாரும் அச்சமடைய வேண்டியதில்லை என அவர் தெரிவித்தார். (நி)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி இந்த விஜயத்தின் போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் தலைவர்களுடன் ஆக்கபூர்வமான சந்திப்புகளில் ஈடுபட்டார். (நி)

# சுமார் 70 அரச அதிகாரிகள்

## பணி நீக்கம்- அமைச்சர் ஜனக வக்கம்புர

(கொழும்பு)

நாட்டில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலங்கள், முடிவடைந்துள்ள நிலையில், நிர்வாக பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள சுமார் 70 பேர் அந்த பதவிகளில் பணியாற்றுவதற்கு தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிகளை உடனடியாக அந்தப் பதவிகளில் இருந்து நீக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, இது போன்ற பல அதிகாரிகள் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், முறைகேடான அதிகாரிகள் இனங் காணப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து நிர்வாகப் பணிகளுக்காக அதிகாரிகள் (செயலாளர்கள் மற்றும் ஆணையர்கள்) நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் அடுத்த மாதம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் ஜுன் 19 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

எனினும், இம்முறை இந்த அமர்வின்போது இலங்கைக்கு அழுத்தம் குறைவாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது. நிகழ்ச்சி நிரல்களின்படி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க், 19 ஆம் திகதி பிற்பகலில் இலங்கை பற்றிய வாய்மொழி அறிவிப்பை வழங்குவார்.

அன்றைய தினமே அவர், ஈரான் இஸ்லாமிய குடியரசு மற்றும் நிகரகுவா மற்றும் இலங்கை பற்றிய தனது எழுத்துப்பூர்வ அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார்.

முன்னதாக 2022 செப்டம்பர் 51/1 தீர்மானத்தின் கீழ், 2023 செப்டம்பர் 2023 இல் நடைபெறவுள்ள 54ஆவது அமர்வில் எழுத்துப்பூர்வ அறிக்கையை வழங்க இலங்கை கட்டாயப் படுத்தப்பட்டிருப்பதால் எதிர்வரும் ஜுன் மாத அறிக்கை கடுமையானதாக இருக்காது என்று ஜெனிவா தரப்பு தெரிவித்துள்ளது.

2022இல் ஐக்கிய நாடுகளின் மனிதை உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51-1 தீர்மானத்தின்போது 20 நாடுகள் ஆதரவாகவும் 7 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 20 நாடுகள் வாக்களிக்கவில்லை.

இந்த தீர்மானத்தின்படி, இலங்கையில் நல்லிணக்கத்தில் முன்னேற்றம் உட்பட மனித உரிமைகள் நிலைமையை கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் மற்றும் மனித உரிமைகள் பேரவைக்கு அதன் ஐம்பத்து மூன்றாவது மற்றும் ஐம்பத்தி ஐந்தாவது அமர்வுகளில் வாய்வழி புதுப்பிப்பை வழங்குதல், ஐம்பத்து நான்காவது அமர் வில் எழுத்துப்பூர்வ அறிவிப்பு மற்றும் அதன் ஐம்பத்தி ஏழாவது அமர் வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கை என்பன இந்த தீர்மானத்தின்படி வலியுறுத்தப்பட்டுள்ளன. (நி)

# அரச அச்சகத்தின் பிரதானி பதவி விலகுகிறார்?

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங் களுக்கான வாக்குச் சீட்டு களை அச்சிடுவதற்கு நிதி யினை வழங்காது தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்க அச்சகத்தின் பிரதானி திருமதி கங்கானி கல்பனாலியனகே எதிர்வரும் ஜுன் மாதம் 24ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக, ஊடக அமைச்சுக்கு எழுத்து மூல அறிவித்தல் விடுத்துள்ளதாக அரசாங்க அச்சகத்தின் பிரதானி தெரிவித்துள்ளார்.

எனினும் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திற்கு இதுவரை பதில் வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## பிறந்த தின வாழ்த்து...



### சின்னத்துரைக்குருக்கள் -பிறைசூடிக்குரு. (சோழியூரான்)

இன்று 29.05.2023 இல் 72 ஆவது அகவையில் காலடி வைக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியரும் ஆன்மிகவாதியும் சந்ததிப்பூச கருமான சோழியூரான் பிறைசூடிக்குரு அவர்கள் தனது 32 ஆவது ஆன்மிகப் போராட்டப் பாதையிலே சென்று கொண்டிருக்கும் இவ் வேளையில் ஐயாவைப் பற்றிய சில தகவல்கள்..........

இன்றைய ஐயாவின் பிறந்தநாளில் பிறப்பைப் பற்றி கட்டாயம் கூறியே ஆக வேண்டும். ஐயாவின் பெற்றோருக்கு எல்லாம் பெண்பிள்ளைகள். ஆண்பிள்ளை இல்லையே என்ற நீண்டநாள் கவலை. உமக்குப் பூசை செய்வதற்கு ஆண்பிள்ளை தராவிட்டால் பூஜையை விடுகிறேன் என்று ஈசுர விநாயகரிடம் மன்றாடி மன்றாடி பூஜை செய்வாராம். ஐயா பிறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் கனவில் அருகிலிருக்கும் முருகன் கோயில் சண்முகரத்தின சர்மா ஐயா அவர்கள் நடுக்கடலிலே நின்று கொண்டு சின்னத்துரை இங்கே வா என்று கூப்பிட்டு வேல் ஒன்றை தகப்பனின் கையில் கொடுத்து பிறைசூடிக்குரு என்ற நாமத்தோடு வேலைக்குத்து என்று கூறி மறைந்து விட்டாராம்.

வேல் கொடுத்த ஐயாவிற்கு சண்முகரத்தின சர்மா ஞாபகார்த்த அலங்கார வளைவையும் வேலுக்கு மலையைக்கட்டி ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். ஆசிரிய சேவை 20 வருடங்கள் (வவுனியா,. இரத்தினபுரி, யாழ்ப்பாணம்) இலங்கையிலே மத நல்லிணக்கம் இன நல்லிணக்கம் ஏற்பட வேண்டி முதன் முதலாக தேசிய மதகுருமார் சபையை (சர்வ மதகுருமார் சபை) மருதானை சுபோதோராமய விகாரையில் ஸ்தாபித்து அதன் பிரதம அமைப்பாளராகப் பணிபுரிந்தவர். (1977 ஜுன்) இன்னும் எமது நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக கூடிய சமாதானத்தை குலையாது காக்க சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் கிருபையோடு ஆலயத்தில் சமாதான அரணை (2000) அமைத்தவர்.



பின்னர் சுயவிருப்பத்தின் பொருட்டு ஆசிரிய சேவையிலிருந்து 1990 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அதன் பின்னர் ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் மக்கள் அல்லற்பட்டு அவதியுறுவதை கண்ணுற்றார். மக்களின் துன்பத்தைப் போக்க சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரை நீதியரசராகக் கொண்டு எமது நாட்டுப்பிரச்சினை சம்பந்தமான மனுவை அவரது தும்பிக்கையிலே நம்பிக்கையோடு சமர்ப்பித்தமை யாவரும் அறிந்ததே. அன்றிலிருந்து இன்று வரை 32 ஆண்டு ஆன்மிகப் போராட்டத்தை நடத்தி வருகின்ற இவ்வேளையில் என்றும் நோயற்ற வாழ்வு வாழ வேண்டுமென்றும் ஐயாவின் இலட்சியம் விரைவாக நிறைவேறிட வேண்டும் என்றும் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றோம்.

(15762)

பறாளாய், சுழிபுரம். மனைவி,பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் சம்பியன்ஷிப் பரிசுத் தொகை அறிவிப்பு

## இலங்கைக்கு 2 லட்சம் டொலர்



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி அடுத்த மாதம் நடைபெற உள்ள நிலையில், ஒவ்வொரு அணிக்கும் பரிசுத் தொகையை ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற உள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன.

இந்தப் போட்டி ஜூன் 7ஆம் திகதி லண்டனின் ஓவல் மைதானத்தில் தொடங்குகிறது.


இதில் வென்று சம்பியன் பட்டம் பெறப் போகும் அணிக்கு எவ்வளவு பரிசுத் தொகை அளிக்கப்படும் எனும் விபரத்தை ஐ.சி.சி அறிவித்துள்ளது.

அதாவது, 1.6 மில்லியன் டொலர் வெற்றி பெறும் அணிக்கும் இரண்டாவது இடம்பிடிக்கும் அணிக்கு 8,00,000 டொலர்களும் பரிசுத் தொகையாகக் கிடைக்கும்.

அத்தடன் தென் ஆபிரிக்காவுக்கு 4,50,000 டொலர்களும் இங்கிலாந்து அணிக்கு 3,50,000 டொலர்களும் 5 ஆவது இடம் பிடித்த இலங்கை அணிக்கு 2,00,000 டொலர்களும் கிடைக்கும். (4)

### இன்ஸ்டாவில் அதிக பாலோவர்ஸ்

# ரொனால்டோ, மெஸ்ஸிக்கு அடுத்த படியாக விராட்



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோலி, சமூக வலைத்தளங்களில் துடிப்பாக இயங்கி வருகிறார்.

குறிப்பாக இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது தான் செல்லும் இடங்களில் எடுத்த புகைப் படங்களை பகிர்ந்து வருகிறார்.

இதனால், இன்ஸ்டாகிராமில் விராட் கோலியை கோடிக்கணக்கானோர் பின்தொடர்கின்றனர்.

இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து தற்போது 250 மில்லியனாக உள்ளது.

இதன் மூலம், ஆசியாவிலேயே இன்ஸ்டாகிராமில் 250 மில்லியன் பின்தொடர்பவர்களை பெற்ற முதல் இந்திய பிரபலம் என்ற பெருமையை விராட் கோலி பெற்றார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் மெஸ்சி அடுத்தபடியாக அதிக பின் தொடர்பவர்களை கொண்ட விளையாட்டு வீரர் என்ற இடத்தையும் விராட்கோலி பெற்றுள்ளார். (4)

# திரைப்படமாக எடுக்கப்படும் கங்குலியின் வாழ்க்கை வரலாறு

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மற்றும் முன்னாள் பி.சி.சி.ஐ தலைவராக இருந்தவர் சவுரவ் கங்குலி. கங்குலி தலைமையில் வெளிநாடுகளில் 28 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இந்திய அணி 11 வெற்றிகளைப் பெற்றது.

இந்த நிலையில், கங்குலியின் பயோபிக் படத்தை பாலிவுட் தயாரிப்பாளர் லவ் ரஞ்சன் தயாரிக்க முன்வந்துள்ளார்.

சமீபத்தில் கங்குலியை நேரில் சந்தித்து இதுகுறித்து அவர் பேசியதாக கூறப்படுகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு இந்த ஆண்டு இறுதியில் தொடங்கப்படலாம் என்றும் இதில் நாயகனாக ரன்பீர் கபூர் நடிக்க கங்குலி விருப்பம் தெரிவித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2838

### பிரதாப்




### பிரநிசா




### ஆதவன்




### ஆரணி




### மயூரி




### தீபா







நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இந்தியாவில் புதிய பாராளுமன்றம் திறப்பு


# ஆதீனங்களிடம் நல்லாசி பெற்று செங்கோலை நிறுவினார் பிரதமர் மோடி












## புனரமைப்பின்றி காணப்படும் வீதி நடவடிக்கை எடுக்க கோரிக்கை



(கரணவாய்)

கரணவாய் மத்தி குளங் கரை வீதி நான்கு வருடங் களுக்க முன் வடமராட்சி மேற்கு பிரதேச சபையால் புன ரமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில் தற்போது குறித்த வீதி புனரமைப்பு இன்றி காணப்படுவதுடன் திருத்து வதற்கு பறிக்கப்பட்ட கற்களும் மாயமாகியுள்ளன.

சீரான முறையில் புனரமை க்கப்படாததால் குறித்த வீதியால் பயணிக்கும் பொது மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

உள்ளூராட்சி ஆணை யாளர் நேரில் சென்று பார்வை யிட்டு இவ் வீதி திருத்துவத ற்கான ஒப்பந்தம் என்ன நட ந்தது என்பதை நன்கு அறிந்து உடனடியாக புனர் நிர்மானம் செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(4-60)



. யாழ்ப்பாணம் - அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மஹோற்சவமானது கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்று 3 ஆம் திருவிழா இடம்பெற்றது.

(படங்கள்: சிவசாந்தன்)

# இராசிபலன்

29.05.2023
வைகாசி 15, திங்கட்கிழமை
நவமி முற்பகல் 10.07 மணிவரை

உத்தரம் பின்னிரவு 2.58 மணிவரை
சுபநேரம் -11.52-1.22 மணிவரை
இராகுகாலம்-7.22-8.52 மணிவரை

பாபகர தசமி அக்கினி நாள் முடிவு
சந்திராஷ்டமம்- சதயம்

வளவன்

**மேஷம்**
மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**ரிஷபம்**
பிள்ளைகளின் தேவை யறிந்து பூர்த்தி செய் வீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேர லாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்**
பொருளாதார நிலை யில் முன்னேற்றம் காணும் நாள், நண் பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனு கூலம் தரும்.

**கடகம்**
குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பய ணங்க்ளால் பலனுண்டு, வழி பாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
புண்ணிய காரியங்க ளில் ஆர்வம் காட்டு வீர்கள், சுப செய் திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கன்னி**
பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரு ம்பிய உணவுப் பொரு ட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்**
நடப்பதெல்லாம் நன் மைக்கேயென நினை க்க வேண்டிய நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் நலன் கருதிய பயண ங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்**
குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், சேமி ப்பை உயர்த்தும் எண் ணம் உருவாகும், குடு ம்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்ப வங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு**
புதிய முயற்சிகள் கைகூடும், செயற் பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்,குடும்ப ஒற்றுமை கூடும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**
மனதில் புதிய சிந்த னைகள் தோன்றும் நாள், குறை சொல் லியவர்கள் பாரா ட்டும் நாள், சுணங்கிய காரிய ங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்**
நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்ளுக்கு விரோத மாகச் செயற்பட லாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்**
உறவினர் வழியில் மனதிற்கினிய செய்தி கள் வந்து சேர்லாம், நீண்ட நாளைய விரு ப்பமொன்று நிறைவேறும் வாய் ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனே என்றிருந்தாலும் தவினை விடாது துரத்தும்.



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் 62 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பிறந்தநாள் அறநிதியச் சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது முல்லைத்தீவு அரச வைத்தியசாலை வைத்திய கலாநிதி வே. ஜெகரூபன்,வலி.மேற்கு பிரதேச செயலர் எழுத்தாளர் திருமதி. பிறேமினி பொன்னம்பலம் ஆகியோருக்கு இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, யாழ். அரச அதிபர் அ. சிவபாலசுந்தரம், யாழ்.பல்கலை விஞ்ஞானத்துறை பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன், துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு.செந்தில் ராஜக்குருக்கள், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: சிவசாந்தன்)

# யாழ்.பண்ணை பொலிஸ் சாவடி மீது கல் வீச்சு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில்அமைந்துள்ள பொலிஸ் சோதனை சாவடி மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்ட குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்ணை பகுதியில் பொலிஸாரின் சோதனை சாவடியில் உள்ள கூடாரத்தின் கண்ணாடிகள் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு நபர் ஒரு வர் கல் வீச்சுத் தாக்குதல் மேற் கொண்டு, கண்ணாடிகளை உடைத்துள்ளார். அதனை அடுத்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தான் மது போதையிலையே கல் வீசினேன் என தெரிவித்துள்ளார். அந்நபரை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(4-33-104)

# மூலதனச் சந்தைப் புதிர் போட்டியில் முகாமைத்துவ பீடத்துக்கு இரு இடங்கள்




(யாழ்ப்பாணம்)


இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் இணைந்து நடத்திய புதிர்ப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் முதலாம் மற் றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

"பல்கலைக்கழக மாணவர்களிடையே மூலதனச் சந்தை தொடர்பான அறிவினைப் விருத்தி செய்வதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகளில் தேர்ச்சி பெறுதலும் எதிர்காலத்தை வடிவமைத்தலும்" என்ற தொனிப் பொருளில் இலங்கை பிணையங்கள்பரிவர்த்தனை ஆணைக் குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் என்பன இணைந்து நடத்திய மூலதனச்சந்தைப் புதிர்ப் போட்டி (Capital Market Quiz Competition) அண்மையில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீட அரங்கில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்தின் 7 பீடங்களைச் சேர்ந்த 19 அணிகள் பங்குபற்றின. ஒவ்வொரு அணியும் 4 உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தன.

பீடங்களுக்கு இடையிலான போட்டியில் முதலாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட ஏ அணியும்,இரண்டாம் இடத்தை பொறியியல் பீட அணியும் மூன்றாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பி அணியும் பெற்றுக் கொண்டன. (4-33)

# கிளிநொச்சியில் மீண்டும் பெரியம்மை நோய்த்தாக்கம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய்த்தாக்கம் அதிகரித்து வருகின்றது.

கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள புண்ணை நீராவி கிராம அலுவலர் பிரிவில் பலரது கால்நடைகள் பெரியம்மை நோய்த் தாக்கம் காரணமாக மிக அதிகமாக பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.

ஒருவர் சவாரி மாடுகள் இரண்டு வளர்த்து வந்த நிலையில் அதில் ஒன்று பெரியம்மை நோய்த் தாக்கம் காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்பே இறந்துள்ளது.

ஏனைய சில கால்நடைகள் பெரியம்மை நோய்த்தாக்கம் காரணமாக உணவு இன்றி நீர் கூட அருந்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் கால் நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந் நோயினால் பாதிக்கப்பட்ட கால் நடைகளில் நாளாந்தம் பெறப்படுகின்ற பாலின் அளவும் குறைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது கால்நடைகளுக்கான மருந்து வகைகளும் பல மடங்கு அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக சம் பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.(4-316)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 400 |
| தக்காளி | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 200 | 200 |
| கோவா | 400 | 450 | 400 |
| கரட் | 400 | 400 | 450 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 200 | 150 | 220 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 360 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 150 |
| பாகற்காய் | 550 | 500 | 500 |
| வெண்டக்காய் | 180 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 360 | 400 | 450 |
| பீற்றூட் | 600 | 400 | 500 |
| கறிமிளகாய் | 400 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 400 | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 70-90 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 220 | 200 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 50 |
| வல்லாரை | 180 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | -- | -- |

# மணவாளக் கோலத் திருவிழா

(சாவகச்சேரி)

தென் மராட்சி வரணி மாசேரி புராதன குருநாதர் கோவிலின் (ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்ப சுவாமி சித்தர்பீடம்) மணவாளக் கோலத் திருவிழாவும்-சேக்கிழார் குருபூசையும் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளன.

காலை 7 மணிக்கு 108 சங்காபிஷேக நிகழ்வு, 12மணிக்கு மூலஸ்தான பரிவார தெய்வ விசேட பூஜைகள்.12மணிக்கு திருவூஞ்சல், சேக்கிழார் சுவாமிகள் குருபூஜை, மாலை 5 மணிக்கு குருநாதர் சுவாமி கிராமவலம் எழுந்தருளல், இரவு 7மணிக்கு வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற இருப்பதாக ஆலயத்தின் பிரதம பூசகர் சிவத்திரு சி.கா.கமலநாதன் அறிவித்துள்ளார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பாரம்பரிய எண்ணெய்க்குளியலும் மருத்துவ முக்கியத்துவமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தமிழர்களின் உடல் நலத்தினை பாதுகாத்துக் கொண்டிருந்த பல நல்ல பழக்கங்கள் இன்று காணாமல் போய்விட்டன. அவற்றில் எண்ணெயிட்டுக் குளிக்கும் பழக்கம் பல குடும்பங்களிலிருந்து மறைந்து விட்டது. அதற்கு முக்கிய காரணம் எண்ணெய்க்குளியலின் முக்கியத்துவத்தை நம் மக்கள் உணராமையே ஆகும். சித்த மருத்துவ நூல்கள் எண்ணெய்க் குளியலால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகளை விளக்குகின்றன.

**எண்ணெயிட்டுக் குளிக்கும் முறை**

✦ உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை எல்லா இடங்களிலும் எண்ணெய் முழுமையாய் பரவி இருக்குமாறு பூச வேண்டும்.
✦ உடலின் ஒன்பது துளைகளிலும் (நவவாசல்கள்) எண்ணெய் விடல் வேண்டும்.
✦ கண்களுக்கு 2,3 துளிகளும் மூக்கில் 4 துளிகளும் காதுகளுக்கு 6 துளிகளும் விடல் வேண்டும்.
✦ தலை, கால், பாதம், உள்ளங்கை ஆகிய இடங்களில் எண்ணெயினை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்.
✦ உடலில் தேய்க்கும் போது சூடு ஏற்படக் கூடாது. உடலில் மிருதுவாக அழுத்தம் கொடுத்து விரல் நுனிகளால் தேய்த்தும் தசைப்பகுதியில் இலகுவாகத் தட்டிவிட்டும் முதுகு தண்டுப் பகுதியில் உள்ளங்கையாலே பெருவிரலாலோ நீவிவிட்டும் எண்ணெய் தேய்க்க வேண்டும்.
✦ எண்ணெய் இட்டு தேய்த்த பின் குறைந்தது 40 நிமிடங்களாவது ஊற விடல் வேண்டும். அப்போது தான் முழுப் பயனும் கிடைக்கும்.
✦ குளிப்பதற்கு வெந்நீரையே பயன்படுத்தல் வேண்டும்.

**எந்த எண்ணெய் பயன்படுத்தலாம்?**

✦ பொதுவாக நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பது நன்று. நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய் மூன்றும் சம அளவு கலந்து காய்ச்சியும் பயன்படுத்தலாம் இதற்கு முக்கூட்டு நெய் என்று பெயர்.
✦ தேங்காய் எண்ணெயை தனியாக பயன்படுத்தியும் குளிக்கலாம்.
✦ நல்லெண்ணெயுடன் மிளகு, சீரகம், பூண்டு, சிறுவெங்காயம் சேர்த்து காய்ச்சிப் பயன்படுத்தலாம். எண்ணெயில் வெந்த பூண்டையும் வெங்காயத்தையும் சாப்பிட்டு விட்டு மிளகு சீரகத்தோடு எண்ணெயையும் தலை உச்சியில் தேய்க்கலாம்.
✦ வெயில்காலத்திலும் உடல்சூடுகூடியிருக்கும்போதும் விளக் கெண்ணெயுடன் சிறிய வெங்காயத்தை சேர்த்துக் காய்ச்சிப் பயன்படுத்தலாம்.
✦ குளிர்காலத்தில் தேங்காயெண்ணெயுடன் மிளகு சேர்த்துக் காய்ச்சி குளித்தால் உடல் குளிரை தாங்கும். முற்றிய தேங்காயை நீர் விடாமல் அரைத்துப் பாலெடுத்து அந்தப் பாலினை காய்ச்சிக் கொண்டிருந்தால் அது எண்ணெயாக மாறும். இது உருக்கு நெய் எனப்படும். இதனை குழந்தைகளுக்கு பூசி குளிப்பாட்டுவதன் மூலமாகத் தோல், தசை வலிமையடையும்.
✦ பசுநெய், நல்லெண்ணெய் சம அளவு கலந்து ஓமத்தை அதனுடன் கலந்து காய்ச்சிக் குளிப்பதால் தும்மல், மூக்கடைப்பு,தலைப்பாரம் நீங்கும்.
✦ கற்றாளை சாறுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சிப் பயன்படுத்தினால் உடல் சூடு தணிந்து உடல் வலிமை உண்டாகும். இரவு உறக்கம் வரும். கண்சூடு, எரிச்சல், சிவப்பு மாறும்.
✦ கறிவேப்பிலை, பொன்னாங்கண்ணி, கரிசலாங்கண்ணி, மருதாணி, நெல்லிக்காய், செம்பருத்தி, வெந்தயம்போன்ற ஏராளமானமூலிகைகளை எண்ணெயுடன் கலந்து காய்ச்சிப் பயன்படுத்துவதால் முடி பாதுகாக்கப்படுவதோடு கண் மற்றும் உடல் உறுப்புகள் வலிமையடைகின்றன.





**எண்ணெய்க் குளியலின் போது உடலை தூய்மைப்படுத்த என்ன பயன்படுத்தலாம்?**

✦ சிகைக்காய்ப்பொடியும், பச்சைப் பயறு பொடியும் சம அளவு கலந்து சோறு வடித்த கஞ்சியுடன் நன்கு கலந்து பயன்படுத்தலாம். இதனுடன் செம்பருத்தி இலைப்பொடி, எலுமிச்சை தோல் பொடி, நெல்லி வற்றல் பொடி போன்ற மூலிகை பொடிகளையும் கலந்து பயன்படுத்தலாம்.
✦ சோப் மற்றும் ஷாம்பூ பயன்படுத்துவதை முற்றிலுமான தவிர்க்க வேண்டும்.

மேலும் எண்ணெய்குளியலின் முழுப் பலன்களை முழுமையாக நமக்குக் கிடைக்க சித்தர்கள் சில வழிமுறைகளை கூறியுள்ளனர். சில உணவுகளை நீக்கி விட்டுச சில உணவுகளை அதிகம் சேர்க்க வேண்டும். அதேபோன்று செயல்களிலும் கட் டுப்பாடு அவசியம்.
✦ அதிகம் புளிப்புள்ள பொருட்களை நீக்க வேண்டும். புளிக்குப் பதில் கோடம்புளி பயன்படுத்தலாம், மாங் காய் தவிர்க்கப்பட வேண்டும்.
✦ வெண்பூசணி, கிழங்குகள், அகத் திக் கீரை, பாகல், கத்தரி, கொத்த வரை, கடலைப்பருப்பு நீக்க வேண் டும்.

பால், தயிர் நீக்க வேண்டும். மோர் சேர்க்கலாம்.

மொச்சை, பட்டாணி, கடுகு போன்ற எளிதில் செரிக்காத உணவுகள் நீக்கப்பட வேண்டும்.

மது, புகை தவிர்த்தல் வேண்டும், புண ர்ச்சி (ஆண், பெண் கூடல்) பகல் உறக்கம் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.
✦ குளிர்ந்த நீர் பயன்படுத்தாமல் வெந்நீர் பருக வேண்டும்.
✦ மாமிசம் நீக்குதல் வேண்டும். ஆனால் அயிரை மீன் போன்ற எளிதில் செரிக்கும் உணவை சேர்த்துக் கொள்ளலாம்.
✦ அதிக வெயில், அதிக குளிர்ச்சியுள்ள காற்று, அதிகம் உடல் உழைப்பு கூடாது.
✦ பிஞ்சுக்காய்கள், மிளகு, சீரகம், ஏலக்காய், கிராம்பு, சாதிக்காய், நெய் என்பவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

**எண்ணெய்க் குளியலின் நன்மைகள்.**

✦ உடலின் இயல்பான இயக்கம் சீராக உதவும்.
✦ உணவுகள், செயல்கள் மூலமாகவும் நோய்கள் மூலமாகவும் இயல்பான வளர் சிதை மாற்றங்களாலும் உடற்கட்டுகளில் மலினங்கள் தங்குகின்றன. (free radicals) இவற்றை உடலிலிருந்து வேகமாக நீக்கும் ஆற்றல் எண்ணெய்க் குளியலுக்கு உண்டு.
✦ உடல் இளமையோடு இருக்க செய்ய உதவும்.
✦ தோலிற்கும் தசைக்கும் இரத்த ஓட்டம் சீராவதால் தோல் சுருக்கம் விரைவாக நீங்கி தோல் பளபளப்புடன் இருக்கும். தோல் நோய்களிலிருந்து பாதுகாக்கும்.
✦ நல்லெண்ணெயில் Vitamin E லினோலிக் அமிலம், ஸ்டியரிக் அமிலம், பால்மிடிக் அமிலம் போன்ற சத்துக்கள் இருக்கின்றன. எனவே நல்லெண்ணெய் குளியலால் தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் பாது காக்கப்படுகிறது. தோலிற்று இயற்கையான கவசமாக விளங்கும்.
✦ தோலில் தங்கியிருக்கும் நுண் மாசுக்கள் நீங்குகின்றது. முடிவேர்ப் பகுதியில் தங்கியிருக்கும் மாசுக்கள் பல சாதாரண குளியலால் நீங்காது. ஆனால் எண்ணெய்க் குளியலால் தோல் முழுமையும் தூய்மையுமாகும்.
✦ உடல் வளர்சிதை மாற்றங்கள், இதய இயக்கம், சுவாச நிகழ்வுகள், குடல் இயக்கம், நாளமில்லா சுரப்பிகளின் (Hormones) இயக்கம், மூட்டு கள் இயக்கம் சீராகின்றன. இயல்பான பசி உண்டாகி சீரண மண்டலம் சிறப்பாக இயங்குகின்றது. உணவின் சுவையினை முழுமையாக உணர முடியும்.
✦ மூளை நரம்பு மண்டலம் சீராகின்றது. மன ஆற்றல் மேம்படுகின்றது. இயல்பான உறக்கம் உண்டாகின்றது.
✦ கண்பார்வை பாதுகாக்கப்படும். கண் வறட்சி நீங்கி கண்ணின் இயக்கம் சீராகின்றது.
✦ முடியில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் (முடி உதிர்தல், வெள்ளை முடி, முடிநுனி வெடிப்பு) முற்றிலும் நீங்குகின்றது. பொடுகு, தலை அரிப்பு போன்றவை நீங்கி அடர்த்தியான, கருமையான முடி வளரும்.
✦ இரத்த ஓட்டம் சீராவதால் இரத்த அழுத்தம் இயல்புக்கு வருகின்றது. எண்ணெய்க் குளியலால் அதி இரத்த அழுத்தம் (Hypretendion) இயல்பு நிலைக்கு வருவதை பல ஆய்வுகள் உறுதி செய்கின்றன.
✦ சர்க்கரை நோயின் பின் விளைவுகளைத் தடுக்க எண்ணெய்க் குளியல் அவசியம்.
✦ உடல் பருமன் கட்டுப்படுகின்றது. பல நோய்களை தடுக்கும் ஆற்றல் எண்ணெய்க் குளியலுக்கு உண்டு. அது போல் நோய் வந்த பின்பும் நோய்க்கான சிகிச்சையுடன் சேர்த்து தகுந்த மூலிகை எண்ணெயினைப் பயன்படுத்துவதால் நோயை வேகமாக உடலை நீக்கும் ஆற்றலும் எண்ணெய்க் குளியலுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

190





போர் வீரர்கள் குடியிருக்கும் ஆரியப்படை வீடு, புதுப் படை வீடு, மணப்படை வீடு, பம்பைப்படை வீடு ஆகிய நாலு வீரபுரிகள் காணப்படுகின்றன. இவ்வளவுக்கும் நடு நாயகமாகச் சோழ மாளிகை என்றால், ஒரே மாளிகையா? விஜயாலய சோழருக்கு முன்னால் இது ஒரு தனி மாளிகையாக இருந்தது.

பிறகு ஒவ்வொரு அரசகுமாரனுக்கும் ஒவ்வொரு இளவரசிக்குமாகப் பழைய சோழ மாளிகையையொட்டிப் புதிய புதிய மாளிகைகள் எழுந்து நிற்கும் காட்சியைக் காண்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும். வர்ணிப்பதற்கோ பதினாயிரம் கவிஞர்களின் கற்பனாசக்தி போதாது.

இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த சேக்கிழார் பெருமான்,

"தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை"

என்று வர்ணித்தார் என்றால், சுந்தர சோழரின் காலத்தில் இந்த நகர் எவ்வளவு கோலாகலமாக இருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

எனினும், நாம் முதன் முதலில் இந்தப் பழம்பெரும் பதிக்குச் செல்லும் சமயத்தில் அதைப் பூரண கோலாகலத் தோற்றத்துடன் பார்த்து மகிழ முடியவில்லை.

சுந்தர சோழ சக்கரவர்த்தி இந்நகரின் சோழ மாளிகையில் வீற்றிருந்து அரசு செலுத்திய காலத்தில் இங்கு வந்து பார்க்க நமக்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை.

சக்கரவர்த்தி நோய்ப்பட்டுத் தஞ்சை மாநகர் சென்ற பிறகு வெளிநாடுகளிலிருந்து சிற்றரசர்களும் இராஜ தூதர்களும் மந்திரிப் பிரதானிகளும் சேனாதிபதிகளும் இங்கு வருவது நின்று போயிற்று. அவர்களுடன் வழக்கமாக வரும் பரிவாரங்களின் கூட்டமும் குறைந்து விட்டது.

நாலு படை வீடுகளிலும் வசித்த போர் வீரர்களில் பாதிப் பேர் இப்போது ஈழ நாட்டுப் போர்க்களங்களில் தமிழர் வீரத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தார்கள்.

மற்றவர்களில் ஒரு பகுதியார் வடதிசை எல்லையிலும் இன்னொரு பகுதியினர் மதுரையிலும் இருந்தார்கள்.

எனவே, படைவீட்டுப் பகுதிகளில் இப்போது பெரும்பாலும் வயோதிபர்களும் பெண்மணிகளும் சிறுவர் சிறுமிகளுமே காணப்பட்டார்கள்.

மழவர்பாடியில் வாழ்ந்து வந்த வேளக்காரப் படையினர் தத்தம் குடும்பங்களோடு தஞ்சைக்குச் சென்று விட்டபடியால், நகரின் அப்பகுதியானது பூட்டப்பட்ட வீடுகளுடன் வெறிச்சென்று இருந்தது.

இராஜாங்க காரியங்களை நடத்தி வந்த அமைச்சர்கள், சாமந்தகர்கள், அதிகாரிகள் அனைவரும் தத்தம் குடும்பத்தோடு தஞ்சைபுரிக்குச் சென்று விட்டார்கள்.

இப்படியெல்லாமிருந்த போதிலும் பழையாறை வீதிகளில் கூட்டத்துக்கும் கலகலப்புக்கும் குறைவில்லை.

அப்பப்பா! பழையாறை என்னும் இந்த ஒரு பெரும் நகரத்துக்குள்ளே எத்தனை சிறிய ஊர்கள்? நந்திபுர விண்ணகரம், திருச்சத்திமுற்றம், பட்டீச்சுரம், . அரிச்சந்திரபுரம் முதலிய ஊர்களும் அந்த ஊர்களின் ஆலயங்களும் இந்தப் பழையாறை என்னும் சோழர் தலைநகரில் அடங்கியுள்ளன.


பழையாறையின் நாலு திசைகளிலும் வடதளி, கீழ்த்தளி, மேற்றளி, தென்தளி என்னும் நாலு சிவனார் கோயில்கள் இருக்கின்றன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உயர்ந்த உள்ளம்



கந்தர்வபுரி என்ற நாட்டை காந்தன் என்ற அரசர் ஆண்டார். அரசர் நல்லவர் என்ற பெயர் பெற்று சிறப்பாக மக்களை ஆண்டார். கவிதைகள் என்றால் அரசருக்கு மிகவும் பிடிக்கும். அரண்மனையில் தினமும் கவியரங்கம் நடை பெறும். அற்புதமான கவிதைகள் எழுதுபவர்களை பாராட்டி பரிசு வழங்கி கௌரவிப்பது அரசரின் வழக்கம்.

அரண்மனையில் ஒரு ஆஸ்தான கவிஞன் இருந்தான். அவன் பெயர் பசுபதி. அற்புதமான கவிதைகள் எழுதுவதில் அவரையாராலும் வெல்ல முடியாது. திறமை இருக்குமிடத்தில் சில சமயம் கர்வமும் வருவதுண்டு. கொஞ்சம் கர்வம் இருந்தது.

கவிதைகள் பாடும் போது ஒருவன் அவைகளை விமர்சனம் செய்வான். அந்த விமர்சகன் பெயர் விமலன்.

எப்பேர்பட்ட கவிதைகளையும் விமலன் விமர்சர்னம் செய்து அதில் உள்ள குற்றங்களை கண்டு பிடித்து விடுவான். ஆஸ்தான கவிஞனான பசுபதியின் கவிதைகளும் விமலனிடம் இருந்து தப்புவதில்லை. எனவே, பசுபதி கவிதை பாடும் முன் பதட்டத்துடன் விமலனை பார்ப்பான். தனக்கு அபார புலமை இருந்தாலும் மனதுக்குள் விமலனுக்கு பயப்படுவான். விமலன் நல்லவன். யாருக்கும் தீங்கு செய்ய மாட்டாட்டான்.

எனவே, அரசர் அவனிடம் அதிக பற்றுவைத்திருந்தார். இவர்களது நட்பு பசுபதியின் அமைதியை கெடுத்தது. அவன் மனதில் விமலன் மீது ஆத்திரம் ஏற்பட்டது. அன்றும் வழக்கம் போல் அரசவை கூடியது.

கவிஞர்கள் பலர் கவிதை பாடி பரிசு பெற வந்தனர். கவிஞர்களை கண்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார். கவிஞர்களுடன் விமர்சகனும் இருந்தான். கவியரங்கம் ஆரம்பமாகும் நேரம் வந்தது. அரசர் முன்நின்று கவிஞர்கள் ஒவ்வொருவரும் அற்புதமான கவிதைகள் பாடினர். அதைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார்.

பிறகு ஆஸ்தான கவிஞன் பாட அழைக்கப்பட்டான். பசுபதி எழுந்து நின்று கவிதை பாடினான். அதைக்கேட்டு பெரும் மகிழ்ச்சி அடைந்து கைதட்டி பாராட்டினார் அரசர்.

மற்ற கவிஞர்களும் பசுபதியை பாராட்டி கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

விமலன் மட்டும் மௌனமாக இருந்து பசுபதியை கவனித்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் பசுபதி பாடிய கவிதைகளின் வரிகள் ஆழமாக பதிந்து இருந்தன. ஒவ்வொரு வரிகளையும் ஒவ்வொரு எழுத்துக்களையும் அவன் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

பிறகு எழுந்து, அரசருக்கும் சபையோர்களுக்கும் வணக்கம் சொல்லி விட்டு தன் விமர்சனத்தை தொடங்கினான்.

அந்த விமர்சனம் பசுபதியை மேலும் ஆத்திரப்படுத்தியது. அவன் பற்களை கடித்து ஆத்திரத்தை அடக்கி கொண்டான். விமலனின் விமர்சர்னம் கேட்டு அரசன் திடுக்கிட்டான். விமலனால் மட்டும் எப்படி இவ்வளவு நன்றாக விமர்சனம் செய்ய முடிகிறது என்று அனைவரும் வியந்தனர்.

"பேஷ் பேஷ்" உங்கள் விமர்சனம் அற்புதம். கவிதை எழுதுவதை விட அதை விமர்சனம் செய்வது தான் சிரமமான காரியம் என்று கூறி பாராட்டிடார் அரசர்.

அன்று வீடு திரும்பிய பசுபதியால் அமைதியாக இருக்க முடியவில்லை. விமலனை எப்படி பழிவாங்குவது என்ற சிந்தனை தான் அவன் மனதில் நிறைந்து இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம். ~ சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்

இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தை நேற்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழகத்திலுள்ள 21 ஆதீன முதல்வர்களும் முன்வரிசையில் வீற்றிருக்க, பாராளுமன்றக் கட்டடம் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.

தவிர, பாராளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவையும் விஞ்சியதாக பாராளுமன்றத்தில் செங்கோல் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்ட நிகழ்வு அமைந்திருந்தது.

ஆம், தமிழகத்திலுள்ள திருவாவடுதுறை ஆதீன முதல்வரால் நேற்று முன்தினம் (27) பிரதமர் மோடியிடம் கையளிக்கப்பட்ட செங்கோல் புதிய பாராளுமன்றத்தில், சபாநாயகரின் இருக்கைக்கு வலது பக்கமாக நிர்மாணிக்கப்பட்டது.

முன்னதாக, நீதி தேவனாக இருக்கக்கூடிய நந்தி எம் பெருமானை தனது மகுடமாகக் கொண்டமைந்த செங்கோலுக்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

தமிழகத்தின் ஆதீன முதல்வர்கள் தேவாரப் பாராயணம் செய்தனர்.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஆதீன முதல்வர்கள் முன்னிலையில் சாஷ்டாங்கமாக செங்கோலை வணங்கினார்.

தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சவ்பிய கரத்துடன் செங்கோலைத் தாங்கி வந்தார்.

ஆதீன முதல்வர்கள் தேவாரத் திருமுறை இசைத்தனர்.

என்னே! அற்புதம் 130 கோடி மக்களைக் கொண்ட இந்திய தேசத்தின் ஜனநாயக அரசாட்சியின் அரண்மனையாக விளங்கும் பாராளுமன்றக் கட்டடத்தில், நம் நாயன்மார்கள் அருளிய தெய்வத் தமிழ்த் திருமுறையாகிய தேவாரம் ஒலிக்க, நீதியின் அடையாளமாக விளங்கும் செங்கோலை பிரதமர் மோடி பிரதிஷ்டை செய்து வைத்தார்.

இவையெல்லாம் எப்படி நடந்தன என்று நினைக்க முடியாத அளவில், தமிழின் பெருமை உலகமெலாம் விளங்கும் வகையில் இந்திய தேசத்தின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தின் திறப்பு விழாவும் செங்கோலின் பிரதிஷ்டையும் சிறப்பாக நடந்தேறின.

ஓ! தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! என்பதன் பொருளை உணர்ந்து கொண்டது உலகம்.

எங்கே? மேன்மைகொள்ள சைவநீதி உலகமெலாம் விளங்காமல் போய்விடுமோ என்ற அச்சம் பலரையும் பற்றிப் பிடித்திருந்த வேளையில், பிரிட்டனில் ஓர் இந்து பிரதமரானார்.

அது அங்கு நடக்க பல்லின மக்களும் ஏகப்பட்ட மொழிகளும் சர்வமதங்களும் உள்ள இந்திய தேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட பாராளுமன்றக் கட்டடத்தில் தேவாரத் திருமுறை இசைக்க, தமிழினத்தின் அடையாளமாக விளங்கும் நந்தி எம் பெருமான் மகுடத்தில் இருக்க, செங்கோல் நிலை நிறுத்தப்பட்டது எனில், இப்பேற்றை இப்பிறப்பில் கண்டவர் அனைவரும் பெரும்பேறு பெற்றவர் என்பது நிறுதிட்டமான உண்மை.

## சர்வதேசநாணய நிதியத்தை விட இலங்கைக்கு இந்தியாவே அதிகம் உதவியது

### இந்திய வெளிவிவகார அமைச்சர் பெருமிதம்

(டில்லி)

சர்வதேச நாணய நிதியத்தை விட இந்தியா இலங்கைக்கு அதிகளவு உதவிகளை வழங்கியுள்ளது என இந்தியவெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய பெருங்கடலில் உள்ள தீவுகள் வளை குடா நாடுகள் தென் கிழக்காசியாவில் உள்ள நாடுகளை உள்ளடக்கிய விஸ்தரிக்கப்பட்ட அயலை உருவாக்குவது குறித்து பிரதமர் மோடி அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைகழக மொன்றில் மோடி யின் இந்தியா எழுச்சி பெறும் சக்தி என்ற கருப்பொருளில் உரையாற்றுகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்புகளும் அண்டை நாடுகளில் இந்தியா பற்றிய பார்வையும் மாற்றமடைந்துள்ளன. இலங்கையில் கடந்த வருடத்தில் இடம் பெற்ற விடயங்களை விட வேறு எதுவும் வியத்தகு விதத்தில் இதனை வெளிப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடந்த வருடம் பெரும்பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டவேளை முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் நாங்கள் உதவினோம். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவியதை விட நாங்கள் அதிகளவு உதவியுள்ளோம். எங்கள் அயல்களை விஸ்தரிக்க முயல்கின்றோம்.

நாங்கள் இந்த விஸ்தரிக்கப்பட்ட அயல் எவ்வாறானதாக யிருக்க வேண்டும் என்பது குறித்தும் ஆராய்கின்றோம். அது இந்து சமுத்திரத்தில் உள்ள தீவுகளாக இருக்கலாம். தென் கிழக்காசியா வளைகுடாவில் உள்ள நாடுகளாகயிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அறுவர் கைதாகி பிணையில் விடுதலை

கேகாலை, அரநாயக்கவில் அசுபினி எல்ல நீர் திட்டத்திற்காக கொண்டு வரப்பட்ட நீர் குழாய்கள் தீப்பிடித்து எரிந்த சம்பவம் தொடர்பில் 06 பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் குறித்த நீர்த்திட்டம் திறந்து வைக்கப்பட்டதுடன் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த நீர் குழாய் தீப்பிடித்து எரிந்திருந்தது.

இந்த தீவிபத்து நாசகார செயல் என தெரிவிக்கப்பட்டதையடுத்து அரநாயக்க பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி, நீர் குழாயில் தீப்பற்றிய சம்பவம் தொடர்பில் 06 பாடசாலை மாணவர்களிடம் அரநாயக்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததாக கேகாலை பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த 06 பாடசாலை மாணவர்களும் அப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி பயின்று வருவதாகவும், இவ் வருடம்சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் குழுவாகும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

விசாரணையின் பின்னர் கைதான மாணவர்கள் பிணையில் விடு விக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## நீர்ப்பாசன கால்வாயில் தவறி விழுந்து குழந்தை பலி

(தம்புத்தேகம)

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் பிரதான நீர்ப்பாசன கால்வாயில் தவறி விழுந்து ஒரு வருடமும் 8 மாதமும் ஆன குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

தம்புத்தேகம, ராஜாங்கனை யாய 4 பகுதியில் நேற்றுமுன்தினம்நீர்ப்பாசன கால்வாயில் குழந்தை தவறி விழுந்துள்ளது.

தம்புத்தேகம, மலியதேவபுர பகுதியைச் சேர்ந்த குழந்தையே உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## முருங்கன் ரயில் கடவையில் தேங்காய் லொறி விபத்து

தம்புள்ளை பகுதியில் இருந்து மன்னார் நோக்கி வந்த தேங்காய் லொறி ஒன்று முருங்கன் ரயில் கடவைப் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 2 மணிக்குப் பின், நிகழ்ந்துள்ளதாக தெரிய வருகிறது.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதி காயங்களுடன் முருங்கன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் லொறியில் பயணித்தவர்கள் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7.285)

## மின்னல் தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

கோனகங்ஆர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வகுருவெல பிரதேசத்தில் வயல் வெளியில் இருந்த இருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தல பிரதேசத்தில் வசிக்கும் 31 மற்றும் 32 வயதுடைய இருவரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இருவரும் மழை காரணமாக அருகில் உள்ள மரத்திற்கு அடியில் சென்ற போதே மின்னல் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோனகங்ஆர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அதிக விலைக்கு அரிசி விற்பனை வர்த்தக நிலையம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தெமட்டகொட பகுதியில் பெருமளவான அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையமொன்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அதிகாரிகளினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட குறித்த சுற்றிவளைப்பின் போது, அதிக விலைக்கு விற்பனை [illegible] 5 கிலோகிராம் நிறையுடைய 250 கீரி சம்பா அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கீரி சம்பா ஒரு கிலோவிற்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலை 260 ரூபாவாக உள்ள போதிலும், குறித்த வர்த்தக நிலையத்தில் ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசி 270 ரூபாவிற்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மேலதிக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (நி)

## நடமாடும் வாக்குப்பதிவு நிலையங்களை நிறுவத் தீர்மானம்- தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

'மாற்றுத்திறனாளிகள் மற்றும் நடக்க முடியாதவர்களுக்காக நடமாடும் வாக்குப்பதிவு நிலையங்களை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து தேவையான தரப்பினருக்கு அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வீடுகளை விட்டு வெளியேற முடியாதவர்களுக்கு விசேட வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதன் மூலம் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம்வழங்கப்பட வேண்டுமென' தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் அரசியல் கட்சி முகவர்கள் வாக்களிப்பதைக் கண்காணிக்க முடியும். அதே நேரத்தில் வாக்காளர் செல்வாக்கு இல்லாமல் வாக்களிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவை ஊழியர்கள், சுதந்திர வர்த்தக வலயங்களுக்குள் பணிபுரிபவர்கள் மற்றும் விசேட வசதிகள் தேவைப்படுபவர்களுக்கும் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட வேண்டும்.

முன்கூட்டியே வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல் நாளுக்கு முன்னதாக வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான முன்மொழிவு சட்ட வரைபு ஆசிரியருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அத்தகைய விதிமுறைகள் விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என நம்புவதாகவும் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II



19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### இலங்கையின் மீன்வளம்

இலங்கையின் கரையோர மீன்பிடி கரையிலிருந்து சுமார் முப்பது கிலோமீற்றர் தூரத்திற்கு நடைபெறுகின்றது. ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகளின் உதவியுடன் சுமார் 75 கிலோமீற்றர் தூரம் வரை இடம்பெறுகின்றது. இலங்கைக் கடலில் கிட்டத்தட்ட 80000 சதுர கிலோமீற்றர்களில் மீன் பிடிக்கலாம்.

இலங்கை ஒரு கண்டமேடையில் அமைந்திருப்பது இங்கு மீன்பிடி சிறப்பாக இடம்பெற பேருதவியாக உள்ளது. இந்தக் கண்ட மேடை கரையிலிருந்து சுமார் 15 கி.மீ தொடக்கம் 30 கி.மீ வரை நீண்டிருக்கிறது. இந்தக் கண்ட மேடை தென்புறத்தில் ஒடுங்கியதாகவும் வடக்கே விரிந்ததாகவும் காணப்படுகின்றது. கண்டமேடையின் அடித்தளங்கள் சூரிய வெப்பத்தை போதுமான அளவு பெறுவதால், இது மீன்கள் வாழ ஏற்ற இடமான பிளந்தன் போன்ற உணவுகளைக் கொண்டுள்ளது. இந்தக் கண்ட மேடை, மீன்கள் இனப்பெருக்கம் செய்ய ஏதுவான வெப்பத்தையும் மறைந்து வாழத்தக்க சூழ்நிலைகளையும் கொண்டுள்ளது.

வடமாகாண கண்ட மேட்டுப் பரப்பளவு 1, 502,24 ஹெட்டராகும்.இதில் இன்று பயன்படும் மீன்பிடிப் பிரதேசம் 478, 920 ஹெட்டர் மட்டுமே. அதாவது சுமார் 32 சதவீதம் மட்டுமே வடமாகாணத்தில் மீன் பிடிப் பிரதேசமாக பயன்படுத்தப்படுகிறது. இலங்கையின் இவ்வாறான மொத்த கண்ட மேட்டு மீன்பிடிப் பயன்பாடு, நாட்டில் உள்ள மொத்த அளவில் அரைப் பங்குக்கும் குறைவாகவே இருக்கிறது. இலங்கையிலுள்ள 2 620 000 ஹெட்டர் மொத்தக் கண்ட மேடைப் பரப்பளவில் 8 கிலோ மீற்றருக்கு உட்பட்ட இன்றைய மீன்பிடிப் பயன்பாட்டுப் பிரதேசம், 1 023 500 ஹெட்டராகவுமே இருக்கிறது.

இவைகள் நூறு சதவீதமாக சரிவரப் பயன்படுத்தப்பட்டாலே, இலங்கையின் கரையோர மீன்பிடியே நாட்டுக்குத் தன்நிறைவைத் தானாகவே கொடுக்கக் கூடியது மட்டுமல்லாமல் இன்றைய நாட்டு நிலைமையில் இது மிகப்பெரிய வருமானத்தை நாட்டுக்கு ஈட்டித் தரும்.

### "தமிழ்ப்புவியியல்" இணையச் செய்தி

"இலங்கையின் வடபகுதி மீன்பிடிகைத் தொழில் நடவடிக்கை" என்ற தலைப்பில் தமிழ்ப் புவியியல் செய்தி என்னும் இணையத்தில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது அது இங்கு தரப்படுகிறது.

இலங்கை அதன் அமைவிடம், அமைப்பு காரணமாக மீன்பிடித் தொழிலுக்கான கடற்சூழலை தன்னகத்தே கொண்டுள்ளது. நான்கு புறமும் கடலால் சூழப்பட்டுள்ள இத்தீவின் கரையோர நீளம் "நாரா" அறிக்கை பிரகாரம் ஏறக்குறைய 1739.3 கிலோ மீற்றர் ஆகும். கரையோரப் பாதுகாப்பு திணைக்கள பிரகாரம் இலங்கையின் மொத்த கரையோர நீளம் 1920 கிலோ மீற்றர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதி மீன்பிடியை அவதானிக்குமிடத்து இங்கு கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி போன்றன சிறப்பாகக் காணப்படுகின்றன. இவ்வாறான மீன்பிடி தொடர்பான நிலைமைகளுக்கு வடபகுதியில் சிறப்பான தளங்களாக யாழ்ப்பாணம்(245.6 கிலோமீற்றர்பரப்பு), மன்னார்(173.4 கிலோமீற்றர்பரப்பு), கிளிநொச்சி (91 கிலோமீற்றர் பரப்பு), முல்லைத்தீவு(66.8 கிலோமீற்றர் ·பரப்பு). ஆகியன காணப்படுகின்றன. இவ்வாறான மீன்பிடி விருத்திக்கு ஏதுவான காராணிகளாக பல்லுருவ கடற்கரை, கண்டமேடைகள், உகந்த கால நிலை, தொழிலாளர் வசதிகள் போன்றவற்றினைக் கூறிக் கொள்ளலாம்.

பல்லுருவ கடற்கரையினை அவதானிக்குமிடத்து மணற்பகுதிகள், பாறைகள், கடனீரேரிகள், பொங்கு முகங்கள், சதுப்புநிலங்கள் ஆகியன மீன் உருவாக்கத்துக்கு துணைபுரிகின்றன. இது மட்டுமல்லாது ஆழங்குறைந்த பகுதி என அழைக்கப்படும் கண்டமேடை 30000 சதுரகிலோ மீற்றர் பரப்பள்வில் காணப்படுகின்றது. குறிப்பாக பேதுரு, மன்னார் முத்துத் தளமேடை, பிரவுண்மேடை ஆகியன வடபகுதியில் காணப்படுகின்றன. இவை சூரிய ஒளியை ஊடுருவ விட்டு பிளந்தன்களின் வளர்ச்சிக்குத் துணை புரிகின்றது. இதனால் மீனினங்கள் இருக்கவும் இனப்பெருக்கத்தினை மேற்கொள்வதற்கும் கண்டமேடைகள். துணை புரிகின்றன.

காலநிலை தன்மைகளினை அவ தானிக்குமிடத்து வடபகுதியானது வடகீழ்ப் பருவக்காற்றின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதியாகும். இதனால் சிறந்த நீரோட்டநிலைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் காரணமாக மீன்பிடி கைத்தொழிலுக்கு சாதகமான ஒருநிலையை இவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றும் மீன்பிடி உற்பத்திக்கு சிறந்த வினைத்திறன் மிக்க தொழிலாளர்கள் காணப்படுகின்றனர்.

குறிப்பாக 2016 நீரியல் மற்றும் வளத்துறை அமைச்சின் தரவுப்படி யாழ்ப்பாணத்தில் 21356 குடும்பங்களும் கிளிநொச்சியில் 3442 குடும்பங்களும் மன்னாரில் 9759 குடும்பங்களும் முல்லைத்தீவில் 3800 குடும்பங்களும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் வடபகுதி மீன்பிடி நிலைமைகளினை அவதானிக்குமிடத்து 30 வருட போர் நிலைமைகள், இயற்கை அனர்த்தங்கள் போன்னவற்றால் பின்தங்கி காணப்பட்டது. குறிப்பாக ஆரம்ப காலத்தில் சுதந்திரத்துக்கு முன்னர் வீச்சுவலை, கட்டு வலை, கரை வலை மூலம் மீன்கள் பிடிக்கப்பட்டன. அத்துடன் படகுகளின் எண்ணிக்கையும் குறைவாகக் காணப்பட்டன.

இதன்பின்பு ஓரளவு வளர்ச்சி பெற்றாலும்1981-1984 களில் போர் நிலைமைகள் ஆரம்பமாயின. 1990 களின் போர்ச்சூழல் 2006 களில் ஈழப்போர் இதன் முடிவு 2008 ஆகும். இவ்வாறு 1981-2006 வரையான போர்ச் சூழலினால் மீனவர்கள் இடப்பெயர்வு, பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியன காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டது. அத்துடன் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாகவும் வடபகுதி மீன்பிடிக் கைத் தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டது.

இது தவிர தென்பகுதி மீனவர்களின் அத்துமீறிய வருகை காரணமாகவும் வடபகுதியில் மீன்கள் அருகுகின்றமை குறிப்பிடததக்கது. மன்னாரில் சவுத்பார் பகுதியில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி மீனவக் குடியிருப்புகளினை அமைத்து அப்பகுதியில் உள்ள மீன்களினை தாம் பிடிக்கின்ற நிலை தற்பொழுதும் காணப்படுகின்றது.

இதுதவிர உயர் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதனால் அப்பகுதியில் மீன் பிடிக்க தடை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீன் உற்பத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைகின்றன. ஆரம்பத்தில் பலாலி, மயிலிட்டி, இரணைதீவு, சேந்தன் குளம் ஆகிய பகுதிகள் இலங்கை கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டன. இதில் இரணைதீவு மீனவர்கள் இரணை மாதா நகருக்கு இடம் பெயர்ந்தனர். முள்ளிக்குள மக்கள் [illegible] தேப்பத்தீவு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். இன்று பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை சேந்தன் குளம் ஆகிய பகுதிகள் மீண்டும் மீனவர்கள் பாவனைக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீழ்ச்சியடைந்த வடபகுதி மீன்பிடி நிலைமைகள் யுத்தத்தின் பின்னர் விருத்தி பெற தொடங்கின. குறிப்பாக மீனவர்களுக்காக மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் 117 கூட்டுறவுச் சங்கங்களும் கிளிநொச்சியில் 26 சங்கங்களும் மன்னாரில் 40 சங்கங்களும் முல்லைத்தீவில் 26 சங்கங்களும் காணப்படுகின்றன.

இது தவிர மீன்களை பழுதடையாமல் பாதுகாக்க ஐஸ்கட்டி தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 9ம் கிளிநொச்சியில் 1ம், மன்னாரில் 5ம், முல்லைத்தீவில் 3ம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன்புதிதாக அதிகளவிலான படகுகள் கொள்வனவு செய்யப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 6676 படகுகளும் மன்னாரில் 4038 படகுகளும் கிளிநொச்சியில் 827 படகுகளும் முல்லைத்தீவில் 1411 படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறன விருத்தி நிலைமைகள் காரணமாக வடபகுதிமீன் உற்பத்திகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக உடன் மீன்பிடி உற்பத்திகள் 2016 ஆம் ஆண்டு தரவுகளின்படி யாழ்ப்பாணத்தில் 31476 மெற்றிக் தொன் ஆகவும் கிளிநொச்சியில் 11 839.15 மெற்றிக் தொன் ஆகவும் மன்னாரில் 16307 மெற்றிக் தொன் ஆகவும் முல்லைத்தீவில் 8 719.35 மெற்றிக் தொன் ஆகவும் பிடிக்கப்பட்டுள்ளது.

உலர்மீன் உற்பத்திகளை அவதானிக்குமிடத்து 2016 ஆம் ஆண்டுத் தரவுகளின்படி யாழ்ப்பாணத்தில் 1721.51 மெற்றிக்தொன் ஆகவும் கிளிநொச்சியில் 780 மெற்றிக் தொன் ஆகவும் மன்னாரில் 815 மெற்றிக் தொன் ஆகவும் முல்லைத்தீவில் 3042 மெற்றிக் தொன் ஆகவும் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒட்டுமொத்தமான மீன்பிடி உற்பத்தியினை அவதானிக்குமிடத்து யாழ்ப்பாணத்தில் 32260 மெற்றிக்தொன் உம் மன்னாரில் 17510 மெற்றிக் தொன் உம், முல்லைத்தீவில் 11140 மெற்றிக் தொன் உம் கிளிநொச்சியில் 14 560 மெற்றிக்தொன் உம் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

லீற்றராகவும் மற்றைய முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான ஒதுக்கீடு 14 லீற்றராகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

மேலும் கார் மற்றும் வேன்களுக்கான ஒதுக்கீடு 40 லீற்றராகவும் பேருந்து மற்றும் லொறிகளுக்கான ஒதுக்கீடு 125 லீற்றராகவும் அதிகரிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (ம-7)

## இளைஞனின்...

சந்திர்தாஸ் (வயது-33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் காணப்பட்ட இடத்திற்கு சென்ற பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவான் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ள நிலையில், சடலம் மீது இன்று உடற்கூற்று பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60,104)

## க.பொ.த (சா/த)...

சையே இன்று முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சையில் நாடளாவிய ரீதியில் உள்ள 3,568 பரீட்சை நிலையங்களில் பாடசாலைகள் மூலம் தோற்றும் 3,94,450 மாணவர்கள் உள்ளடங்கலாக 4,72,553 பேர்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (ம-7)

## வடக்கு மக்களின்...

மாகாணத்தின் புதிய ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி, வடமாகாணத்தில் இந்தியாவினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து உயர்ஸ்தானிகர் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும் மக்களின் நலனுக்காகவும், இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தந்தை விபத்தில்...

வீதி விபத்தில் வடமராட்சி ஆழியவளை பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி கலைரூபன் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் விசுவமடு பகுதியிலிருந்து ஏ9 வீதியூடாக ஆழியவளை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பளை பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ரிப்பர் ரக வாகனம் உழவு இயந்திரம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டுள்ளது.

அதன்போது முன்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் ரிப்பர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கலைரூபன் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

விபத்தில் பலியானவரின் மகன் இன்று இடம்பெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவனாவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## மத சுதந்திர...

பௌத்த மதத்தை புண்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட நதாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டமை பௌத்த கல்வி அமைச்சின் நேரடி தலையீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

மதங்களுக்கு எதிரான செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸில் புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

புத்த சாசன அமைச்சு தூங்குகிறது என்று குறிப்பிட்டிருந்ததையும் அவதானித்துள்ளேன். புத்த சாசன அமைச்சு 24 மணிநேரமும் விழித்திருக்கிறது. அதனால்தான் இதுபோன்ற விடயங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டவுடன், புதிய சட்டமூலம் ஒன்றை கொண்டு வர தீர்மானித்துள்ளேன் எனத் தெரிவித்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

# ஐ.பி.எல் இறுதிப் போட்டி இன்று நடைபெறும்



அஹமதாபாத்தில் நேற்று இடம்பெறவிருந்த ஐபிஎல் போட்டித் தொடரின் இறுதி போட்டியை இன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதவிருந்தன.

இருப்பினும் நேற்று மாலை முதல் போட்டி நடைபெறவிருந்த அஹமதாபாத் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் போட்டியை இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஐபிஎல் போட்டித் தொடரின் இறுதி போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு அஹமதாபாத் விளையாட்டரங்கில் நடைபெறும்.

இன்றும் போட்டி தடைப்பட்டால் புள்ளி பட்டியலில் முதலாமிடம் வகிக்கு குஜராத் அணிக்கு வெற்றி அறிவிக கப்படும். (ம-7)

## மத முரண்பாடு...

எடுக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாதம் மற்றும் மதவெறியைப் பரப்புவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார் என்றும் வஜிர அபேவர்தன சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் வஜிர அபேவர்தன இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கைப்பற்றியதன் முதன்மையான நோக்கம் வீழ்ந்த நாட்டைக் கட்டியெழுப்புவதே கடந்த காலங்களில் சிலர் எடுத்த தனிப்பட்ட தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கியதன் காரணமாக இலங்கை மீது ஜப்பானுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

எனவே அதனை போக்குவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பான் விஜயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், நீண்ட காலமாக தேசியத் திட்டத்தைச் செயல்படுத்த எந்த நாட்டுத் தலைவருக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் வஜிர அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 28/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1583
வெற்றி இலக்கங்கள்: கும்பம் 9 0 2 4 8 3
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.05.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1158
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 05 40 52 80

### கொவிசெத

திகதி 2023.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 3370
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 37 55 69 73
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 28/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1476
வெற்றி எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 16
வெற்றி இலக்கங்கள்: 29 35 54 57

### ஹந்தஹன (HANDAHANA)

சீட்டிழுப்பு திகதி 2023.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 437
வெற்றி இலக்கங்கள்: மகரம் 06 11 24 59 மகரம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/05/28
சீட்டிழுப்பு இலக்கம் 5128
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 9 4 4 3 9 7
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2102
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.28
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: C 33 43 62 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,827,340/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

### சனிதா (Shanida)

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.28
வெற்றி வாரம்: 4263
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 47,089,232.70
வெற்றி இலக்கங்கள்: 49 63 72 75
ஆங்கில எழுத்து: P
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

### சசிரி (SASIRI)

வெற்றி வாரம் 329
சீட்டிழுப்பு திகதி 2023.05.28
கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 04 24 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,480,260/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 4,744,693.40
திகதி 2023-05-28
வெற்றி வாரம் 3814
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்: 01 14 52 61
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,591,140/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

### சுப்பிரி

சீட்டிழுப்பு வாரம் 1278
வர்ணம் மஞ்சள்
திகதி 2023.05.28 ஞாயிற
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: I 32 13 51 52 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 333,412,555.80
DLB தொலைபேசி 011-2 333 546-47

### அட கோட்டிபதி (ADA KOTIPATHI)

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 1928
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 50,331,629/-
வெற்றி இலக்கங்கள்: 28 61 63 74
ஆங்கில எழுத்து: C
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 8 ஆம் திகதி முதல் அரசுக்கு எதிராக போராட்டங்கள்

## ஜே.வி.பி தலைவர் அநுர

உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக ஜூன் 8 ம் திகதி முதல் மீண்டும் போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரதிசநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

ஜூன் 8ம் திகதி தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா அம்பாந்தோட்டை அனுராதபுரத்தில் பாரிய போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ள ஜே.வி.பியின் தலைவர் இறுதியாக கொழும்பை சுற்றிவளைப்பதற்கான மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்கள் மக்களிற்கும் நாட்டிற்கும் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளனர் 68 வீதமான மக்கள் உணவு உண்பதை குறைத்துக்கொண்டுள்ளனர் என்பதை மத்திய வங்கியின் சமீபத்திய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

40 வீதமானவர்கள் மருந்துகளை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டனர் மேலும் நாற்பது வீதமானவர்கள் கல்விச்செலவுகளை நிறுத்திவிட்டனர் எனவும் மத்திய வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15746)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு றாஜ் - 076 559 3322 (15767)

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985.11.30 ஆம் திகதி, திருவாதிரை நட்சத்திரம், மிதுனராசி, கிரகபாவம் 19 1/4, பிறந்த நேரம் நள்ளிரவு 12.25, சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

வரதட்சனை எதிர்பார்க்கப்படமாட்டாது. (15766)

தொடர்பு

077 805 1655

அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன. (C-6640)



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

0768226240 / 0768226241

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா (C-6640)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடிப்பு தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

**நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

இன்றே பாவியுங்கள்

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By: SITHARA SIDDHAYURVEDA PHARMACY. (C-6637)

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப் பூங்கா® இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி : 021 222 2567 (குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 13 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- வட்டுக்கோட்டை மாவடி சந்தியில் இருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் உபவில் வீதி பிரதான காபற் வீதி முகப்புடன்
- 786 வழி இலக்க தனியார் CTB பேருந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200m தூரத்தில்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- மாவடி சந்தியில் இருந்து 800m தூரத்தில். (15773)

076 739 0413
076 733 6093

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (15773)

077 638 5683
076 755 8606

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இளவாலையில் 36 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள்,சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- பரப்பு ஒன்றின் விலை 800,000 (எட்டு இலட்சம்) (15773)

076 165 3129
076 911 9371

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய் கொமர்ஷல் வங்கியில் இருந்து 300m தூரத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 2 பரப்பு காணியில் 3000 சதுர அடி அளவில் 7 அறைகள் (2 AC ROOM) 3 வரவேற்பறை, 3 குளியலறை, சமையலறையுடன் தளபாடங்கள், தொலைக்காட்சி, இணைய வசதி மற்றும் 24 மணி நேர கண்காணிப்புடன் கமராக்கள் போன்ற சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம் மாலை 4.00 - 7.00 மணிவரை

தொடர்புகளுக்கு - உரிமையாளர்

077 102 2763 (15759)



உ சிவமயம்

**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு**

**2023 ஆம் ஆண்டு உயர் திருவிழாவிற்கான ஒலி ஒளி அமைப்பு சேவைக்கான கூறுவிலை கோருதல்**

கோவிலின் 2023 ஆம் ஆண்டு உயர் திருவிழாவிற்கான ஒலி ஒளி அமைப்பு சேவைக்கான பொருட்கள், கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறு விலையினை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோவிலின் காரியாலயத்தில் கூறுவிலைப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 2023.06.06 ஆம் திகதிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் மாலை 5.00 மணிக்கு முன்னர் இடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கடிதம் மூலம் அனுப்புபவர்கள், பதிவு அஞ்சல் மூலம் அனுப்ப விரும்புபவர்கள் **செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்** என்ற முகவரிக்கு 06.06.2023 திகதி மாலை 5.00 மணிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒலி ஒளி அமைப்புக்கான கூறுவிலை 2023 என காட்டப்பட வேண்டும்.

ந.மோகனரூபன்
செயலாளர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
அறங்காவலர் சபை, நயினாதீவு.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org